1981 செப்டம்பர் 1]

தண்ணீர் கிடைக்கவில்லையானால், தண்ணீர் கிடைக்கிற பகுதியை நோக்கி யானைகளும் மற்ற விலங்கினங்களும் செல்கின்றன. ஆகவே, இயற்கையான அந்தச் சூழ்நிலையைப் பாதுகாக்கத்தான் அரசாங்கம் முயற்சி எடுக்கிறதே தவிர, அதை அழிப்பதற்கோ தடுப்பதற்கோ முயற்சி எடுக்க முடியாது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து வரக்கூடிய யானைகள் திரும்பிச் செல்லும்போது தமிழ் நாட்டு மலைப்பகுதிகளிலே இருக்கக்கூடிய நமது யானைகளையும் சேர்த்து அழைத்துச் செல்வதாக அறிகிறோம். அப்படியிருக்கும்போது இங்குள்ள யானை வளம் குறைகிறது. அதைத் தடுப்பதற்காக கேரள, தமிழ்நாடு அரசுகள் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றிய குறிப்புகள் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, யானைகளைப் பொறுத்தவரை அவை கேரள யானை அல்லது தமிழ்நாட்டு யானை அல்லது கர்நாடக யானை என்று பிரிக்க முடியாது. அவைகளெல்லாம் தொடர்ந்து மலைப்பகுதிகளிலே, காடுகளிலே வசித்து வருகின்றன. ஆகவே, இந்த மூன்று மாநிலங்களிலும் இந்த யானைகள் போக்குவரத்தும் வைத்துக் கொண்டிருக்கின்றன, உறவையும் வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த உறவைப் பிரிப்பது நம் இயற்கையைப் பிரிப்பது போலாகும். அந்தப் பாவத்திற்கு நாம் ஆளாகக் கூடாது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நீண்டகாலக் கடன்கள்.

*வினா எண். 144—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையில் மண்வளப் பாதுகாப்பு திட்டப் பிரிவு வேலைக்காக, விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் திட்டத்தில் கடன் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், என்ன வேலைகளுக்காக கடன் வழங்கப்படுகிறது ?

(இ) எவ்வளவு கடன் வழங்கப்படுகிறது ?

(ஈ) உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ)—

சம உயர வரப்பிடுதல் ..	ஏக்கருக்கு ரூபாய் 150 முதல் ரூபாய் 200 வரை.
நிலம் சமன் படுத்தல்.. ..	ஏக்கருக்கு அதிக பட்சம் ரூபாய் 1,000 வரை (தனிப்பட்ட நபருக்கு மொத்தம் அதிக பட்சம் ரூபாய் 5,000).
பாசனக்குழாய் அமைத்தல் ..	ஏக்கருக்கு அதிக பட்சம் ரூபாய் 1,000 (தனிப்பட்ட நபருக்கு மொத்தம் அதிக பட்சம் ரூபாய் 5,000).
படிமட்டம் அமைத்தல் மற்றும் சம உயர கற்சுவர் கட்டுதல்	ஏக்கருக்கு ரூபாய் 2,500.
நில நீர் வேளாண்மைப் பணிகள்	ஏக்கருக்கு ரூபாய் 200 முதல் ரூபாய் 250 வரை.
ஓடை அரிப்பு, பராமரிப்பு பணிகள்	ஏக்கருக்கு ரூபாய் 200 முதல் ரூபாய் 250 வரை.

(ஈ) தற்போதைக்கு உயர்த்தும் உத்தேசம் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அறிவித்திருப்பது ரொம்ப காலத்திற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்டது. இப்பொழுது விலைவாசிகள் எல்லாம் ஏறிவிட்டன. ஆகவே, அந்த அடிப்படையில் மீண்டும் பரிசீலனை செய்து, இந்தத் தொகையினை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலைக்கேற்பத்தான் அத்தகைய ஏற்பாடுகளை நாம் செய்ய முடியும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை நாம் பரிசீலிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைப் பொறியியல் துறையைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் ஒரு போராட்டம் நடத்தி சிறைப் படுத்தப்பட்ட பின்னாலே அவர்கள் சொந்த ஜாமீனிலே வெளி வந்து இன்னும் சஸ்பென்ட் செய்யப்பட்ட நிலையிலே இருக்கிறார்களே, அவர்களை அழைத்து.....

[1981 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைப் பொறியியல் துறையில் விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் திட்டத்தில் கடன் வழங்கப்படுகிறதா என்பது மூலக் கேள்வி. நீங்கள் கேட்ட கேள்விக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அதிகபட்சம் 5,000 ரூபாய்க்கு மேல் கொடுக்கமுடியாது, நிதி நிலைமையைப் பொறுத்து பார்க்கலாம் என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே ஒரு கிணற்றிலே மண் அதிகமாகி அத ன அப்புறப்படுத்தவேண்டுமானால் குறைந்த பட்சம் 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் தேவைப்படுகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் தயவு செய்து மறுபரிசிலனை செய்து, ஒரு நபர் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ. 10 ஆயிரம் கொடுக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எதிர்பாராத முறையில் ஏற்படுகின்ற சூழ்நிலையில் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை அரசு கவனிக்கும். இப்போது அதை உயர்த்துகின்ற உத்தேசம் இல்லை என்றுதான் நான் சொன்னேன். இருந்தாலும் இப்போதுள்ள நிதிநிலையை வைத்து அரசு பரிசீலிக்கும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, அண்மையில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு, அடிவெட்டு செய்வதற்கு நிறையபேர்கள் மனு கொடுத்துள்ளார்கள். கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அப்படி எவ்வளவு பேர்கள் மனு கொடுத்தார்கள். மனு கொடுத்த அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மண்வளப் பாதுகாப்புத் திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால், இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தினால், கண்மாய்களுக்கு வருகிற தண்ணீர் தடை செய்யப்படுகிறது என்று ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஆட்சேபணை செய்யும் இடங்களிலாவது இது தவிர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, குறிப்பிட்டுக் கூறினால் அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.